விளக்க 2 × 1/2 = 01 புள்ளி

(iv) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையுடன் தொடர்புடைய பேரினச் சூழல் போக்குகள் **இரண்டினை** இனங்காண்பதுடன் அவை எவ்வாறு இந்நிறுவனத்தில் தாக்கம் செலுத்தும் என்பதை விளக்குக.

பேரினச் சூழல் போக்கு	தாக்கம்
1. கழிவகற்றல்	கிரயத்தில், சமூக அக்கறையில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினையில் ஊழியர் தொடர்பான அக்கறையில்
2. கழிவகற்றல் முகாமைத்துவம்	கிரயத்தில், சமூக அக்கறையில் சுகாதாரம் பாதுகாப்புப் பிரச்சனையில்
3. பொருளாதாரச் சூழல்	கேள்வி குறைவடைதல், உற்பத்தி குறைவடைதல், உற்பத்திக் கிரயம் அதிகரித்தல், இறக்குமதியை வரையறுத்தல்.
4. இயற்கைச் சூழல்	கழிவகற்றல் முகாமைத்துவத்தில் பிரச்சனை

2 × 1 = 02 புள்ளிகள் போக்குடன் பொருத்தபாடான விடைக்கு 2 × 1 = 02 புள்ளிகள்

(v) யுதேவ் கம்பனியின் முகாமையானது எதிர்காலத்தில் பாதணி உற்பத்தியைத் தொடராதிருப்பதற்குத் தீர்மானிக்குமாயின், இதனூடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக.

(1) வேலையின்மை அதிகரித்தல்
(2) வரிவருமானம் குறைவடைதல்
(3) சந்தையில் பொருட்கள் தட்டுப்பாடு
(4) விநியோகச் சங்கிலியில் இடையூறு

குறிப்பிட 2 × 1 = 02 புள்ளிகள்
விளக்க 2 × 1 = 02 புள்ளிகள்

2. "அங்கீகார வணிகம் என்பது உலகமெங்கும் காணப்படும் ஒரு வணிக முறை ஆகும்."

(i) (அ) இவ்வணிக முறையின் மூலம் அங்கீகாரம் வழங்குபவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) முதலீடு இன்றி வணிகத்தை விரிவுபடுத்தலாம்
(2) அங்கீகாரம் பெறுபவரின் முதலீட்டின் மூலம் அனுகூலங்களைப் பெறமுடிதல்
(3) விளம்பர செலவை அங்கீகாரம் பெறுபவருடன் பகிரலாம்
(4) அங்கிகாரம் பெறுபவரின் வினைத் திறனின் அடிப்படையில் நன்மையைப் பெறலாம்
(5) அங்கீகாரம் பெறுபவர் மூலம் அங்கீகாரம் வழங்குபவர் வளர்ச்சியடைதல்
(6) பண்டக்குறி தொடர்பில் விளக்கம் அதிகரித்தல்
(7) மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்
(8) ஊழியர் மேற்பார்வை குறைவடைதல்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) இவ்வணிக முறையின் மூலம் அங்கீகாரம் பெறுபவர் முகங்கொடுக்கும் பிரதிகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) அங்கீகாரம் வழங்குபவரின் கட்டுப்பாடு காரணமாக அங்கீகாரம் பெறுபவருக்கு பூரண சுதந்திரம் கிடைக்காது.
(2) அங்கீகார வணிக முறைமையினை பெற்றுக் கொள்ள பாரிய செலவொன்றை ஏற்க வேண்டி இருத்தல்
(3) இலாபம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை
(4) அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பில் தங்கியிருப்பதால் முதலீடு தொடர்பான நட்ட அச்சம் காணப்படல்
(5) அங்கிகார ஒப்பந்தத்துக்கு ஏற்ப செயற்பட வேண்டியிருப்பதால் அங்கிகாரம் பெறுபவர் அழுத்தங்களுக்கு உட்படல்.

2 × 1 = 02 புள்ளிகள்

(ii) (அ) சட்டம் மற்றும் ஒழுக்கம் என்பவற்றுக்கிடையே காணப்படும் வித்தியாசங்கள் இரண்டினைத் தருக.

சட்டம்	ஒழுக்கம்
1. விதிகள் மற்றும் பிரமாணங்களின் தொகுப்பு	சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க நெறிகளும் பழக்கவழக்கங்களும்
2. சட்டத்தை மீறும் போது தண்டனை வழங்கப்படும்	தண்டனை வழங்கப்படமாட்டாது.
3. அரசியலமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்படும்	சமூகத்தினரால் உருவாக்கப்படும்
4. நீதிமன்றம் மூலமாக சட்டத்தை மாற்றலாம்	சமூக நடவடிக்கைகளால் மாற்றக் கூடியது
5. புறவயமானது	அகவயமானது
6. கட்டாயம் எழுத்து மூலம் இருத்தல் வேண்டும்	எழுத்து மூலம் காணப்படாது
7. எல்லோருக்கும் பொதுவானது	வேறுபட்டது / பொதுவானதல்ல
8. எதிர்வினையாற்றக் கூடியது	எதிர்வினையாற்றக் கூடியதல்ல

இரு ஒப்பீடுகளுக்கு 2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) நிலைபேறான அபிவிருத்தியின் அடிப்படை மூலங்கள் இரண்டினை அவற்றுக்கான உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக.

(1) சமூக நிலைபேறான அபிவிருத்தி - சமூக நலனோம்பலை அதிகரித்தல், வறுமையை ஒழித்தல்

(2) சூழல் நிலை அபிவிருத்தி - சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வணிகத்தை நடத்திச் செய்தல் (காபன் கழிவு பொதியிடல்)

(3) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி இலாபம், இணங்கிச் செல்லல், நல்ல ஆளுமை, இடர்முகாமை நிலை

குறிப்பிட 2 × 1 = 02 புள்ளிகள்
உதாரணம் 2 × 1 = 02 புள்ளிகள்

(iii) (அ) 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக இலங்கையின் பங்குடைமை வணிகத்தில் தாக்கம் செலுத்தும் வேறு சட்டங்கள் இரண்டினைப் பெயரிடுக.

1. 1840 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க மோசடித் தவிர்ப்புச் சட்டம் - திருத்தம் 2022 ஆம் ஆண்டு 30 ஆம் இக்கச் சட்டம்
2. 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க பெயரக் கட்டளைச் சட்டம் - திருத்தம் 1987 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க வியாபரப் பெயர் பதிவுச் சட்டம்
3. குடியியல் நடைமுறை சட்டக் கோவை பிரிவுகள் 64, 202, 249, 252
4. 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) கூட்டுறவு வணிகத் துறையில் காணப்படக்கூடிய குணாம்சங்கள் நான்கினைத் தருக.

1. சுயாதீனமான அமைப்பு
2. சுயமாக ஒன்றிணைந்த தனிநபர்த் தொகுதி
3. அங்கத்தவர்களின் சம உரிமை
4. பொதுத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியது.
4. ஜனநாயக ரீதியான நிர்வாக அமைப்பு
6. பங்குகளின் பெறுமதியில் மாற்றம் இல்லை (பங்கொன்றின் விலை ரூபா 100)
7. ஒருவருக்கு ஒரு வாக்குரிமை மட்டும்
8. கூட்டுறவின் மேலதிக இலாபம் அங்கத்தவரின் கொடுக்கல் வாங்கல் பெறுமதிக்கேற்ப பகிரப்படும்
9. இலாபத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டிராமை

4 × 1/2 = 02 புள்ளிகள்

(iv) (அ) வரையறுத்த பொதுக் கம்பனிகளின் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பங்குகள் தொகுதிக்கடன் பத்திரங்களை பகிரங்கமாக விநியோகிக்க முடியும்
2. பங்குகளின் உரிமையை சுதந்திரமாக மாற்றமுடியும்
3. சட்டக் கட்டுப்பாடுகள் அதிகம் காரணமாக மோசடிகள் குறைவடையும்
4. பாரிய மூலதனம் திரட்டக் கூடிய ஆற்றல்.
5. சிறந்த நிர்வாக முகாமைத்துவ முறைகள் காணப்படல்
6. பங்குச் சந்தைச் செயற்பாட்டில் ஈடுபட முடியும்

குறிப்பிட 4 × 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக தனியார் மற்றும் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பெயர்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கட்டாயத் தேவைப்பாட்டினைக் குறிப்பிடுக.

பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகள்	தனியார் கம்பனிகள்
பொதுவரையறுத்த (PLC) LTD என்பது காணப்படல்	தனியார் வரையறுத்த (PVT) LTD காணப்படல்

1 புள்ளி 1 புள்ளி

(v) 'பொதுத்துறை நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு' என்பதால் கருதப்படுவது யாது என்பதனை வரையறுப்பதுடன் அதன்மூலம் அரசாங்கம் அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

மீள்கட்டமைப்பு :- பொதுத் துறை நிறுவனங்களின் உடைமையாண்மை செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புக்களை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் பொதுத் துறை நிறுவனங்களில் மீள்கட்டமைப்பு எனப்படும்.

அல்லது

அரச நிறுவனங்களின் உரிமை, கட்டமைப்பு, வளப்பாவனை என்பவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதன் மூலம் செலவுகளைக் குறைத்து உரிமை, கட்டமைப்பு, செயற்பாடுகளில் மாற்றம் செய்தல்

தொடர்புபட இருப்பின் 02 புள்ளிகள்

நோக்கங்கள் :-

- அரச பாதீட்டின் சுமையைக் குறைப்பதற்காக நிதிமூலங்களை உருவாக்கல்
- போட்டித்தன்மை மற்றும் வினைத்திறனை அதிகரித்தல்
- நவீன தொழிநுட்பத்ததை உட்புகுத்தல்
- பொதுமக்களுக்கும் நுகர்வோருக்கும் சிறந்த சேவையை வழங்கல்
- பங்குவழங்கல் மூலம் உரிமையாண்மையை பரவலாக்கல்
- நிறுவன கலாசாரத்தை உருவாக்கல்
- நல்லாளுகையை உருவாக்கல்

4 × 1/2 = 02 புள்ளிகள்

3. (i) (அ) காசோலையில் குறுக்குக் கோடிடக்கூடிய **நான்கு** தரப்பினரைப் பெயரிடுக.

1. காசோலையை வரைபவர் (Drawer)
2. காசோலையைப் பெறுபவர்
3. பணம் செலுத்தும் வங்கி (குறிப்பிட்ட வங்கி) (Drawee)
4. சாட்டுதல் செய்யப்படுபவர்

4 × 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) காசோலையில் 'கைமாற்றத்தகாதது' என குறுக்குக் கோடிடுவதனால் ஏற்படக்கூடிய சட்டத் தாக்கத்தைச் சுருக்கமாக விவரிக்குக.

காசோலையினை சாட்டுதல் செய்யும் போது சாட்டுபவரை விட சாட்டப்படுபவருக்கு உரிமை கிடையாது என்பதனைக் குறிப்பதாகும்.

02 புள்ளிகள்

(ii) (அ) கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தன்னியக்க டெல்லர் இயந்திரமொன்றின் (ATM) மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பணத்தை மீளப் பெறல்
2. பணத்தை வைப்பு செய்தல்
3. கணக்குகளுக்கிடையே பணத்தை மாற்றுதல்
4. மீதியை அறிதல்
5. பட்டியற் கொடுப்பனவுகளைச் செய்தல்
6. தனிப்பட்ட ரகசிய இலக்கத்தினை மாற்ற முடிதல் (Pin)
7. கொடுக்கல் வாங்கல் பற்றிய சிறிய அறிக்கையைப் பெறமுடிதல் (Mini Statement)

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதாவது **ஒன்றினை** மாத்திரம் சுருக்கமாக விவரிக்குக.
(1) பாரிய தரவு (big data) (2) இலத்திரனியல் பணம் (e-money)

(1) பாரியளவு தரவு :- பல்வேறு விதமான (variety),அளவில் அதிகமான (volume) , வேகமான (velocity) தரவுத் தொகுதி (V_3ஐ நோக்கவும்)

அல்லது

(2)இலத்திரனியல் பணம் :- தகவல் தொடர்பாடல் மற்றும் எண்ணியல் தொழிநுட்ப வளர்ச்சியினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட கணினி வலைப்பின்னல் ஊடாக இடம்பெறும் கொடுக்கல் வாங்கல் முறைமை (கடனட்டை, வரவட்டை, முற்கொடுப்பனவட்டை)

ஏதாவது ஒரு சிறுகுறிப்பிற்கு 02 புள்ளிகள்

(iii) (அ) முயற்சியாண்மையின் அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதிசாரா சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. ஆலோசனைச் சேவை
2. முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத் திட்டம்
3. ஆய்வு அபிவிருத்தி, தொழிநுட்ப அபிவிருத்தி
4. உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுத்தல்
5. சந்தைப் படுத்தல், விற்பனை வசதிகள் செய்து கொடுத்தல்
6. விருதுவழங்கலும் கௌரவித்தலும்

2×1 = 02 புள்ளிகள்

(ஆ) "ஆக்கத்திறனானது முயற்சியாளர் ஒருவரின் அடிப்படைக் குணாம்சம்." இக்குணாம்சத்தின் முக்கியத்துவத்தினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

வித்தியாசமான முறையில் நோக்குகின்ற, சிந்திக்கின்ற, செயற்படுகின்ற ஆற்றல்

உதாரணம்:

1. புதிய வணிக மாதிரிகளை உருவாக்குதல்
2. புதிய வணிகத் திட்டம் உருவாக்கல்
3. புதிய கொடுக்கல் வாங்கல் முறைகளை உருவாக்கல்
4. புதிய விநியோக வழிமுறைகளை உருவாக்கல்

விளக்க 01 புள்ளி
உதாரணம் 01 புள்ளி

(iv) "முயற்சியாண்மையானது நாடொன்றின் அபிவிருத்தியின் ஜீவநாடியாக அங்கீகரிக்கப்படுகின்றது." இவ்வங்கீகாரத்துக்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பொருளாதார விருத்தியினை வேகப்படுத்தல்.
2. புத்தாக்கங்களை விருத்தி செய்தல்.
3. சமூக மாற்றங்களில் விருத்தி.
4. கைத்தொழில் அபிவிருத்தி.
5. தற்போது காணப்படும் வணிகத்தின் வளர்ச்சியும் விருத்தியும்
6. உற்பத்தித் திறன் அதிகரித்தல்.
7. வேலை வாய்ப்பு உருவாக்கல்
8. புதிய வருமான மூலங்களை உருவாக்குதல்.
9. உள்நோக்கிய, வெளிநோக்கிய வழங்கல் சங்கிலியை விருத்தி செய்தல்

4× 1= 04 புள்ளிகள்

(v) இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அமைப்புக்கள் தற்போது முகங்கொடுக்கும் சவால்கள் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. நிதி நெருக்கடி
2. சந்தைப் போட்டிக்கு முகங்கொடுக்க முடியாமை.
3. பலவீனமான முகாமை
5. முயற்சியாண்மைத் திறன் குறைவு
6. உட்கட்டமைப்பு வசதி போதாமை.
7. புதிய தொழிநுட்ப அறிவு குறைவு
8. புதிய தொழிநுட்பங்களை ஈடுபடுத்தாமை

4× 1 = 04 புள்ளிகள்

4. (i) (அ) ஆயுட் காப்புறுதிக்கும் சுகாதாரக் காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைப் பெயரிடுக.

ஆயுட் காப்புறுதி	சுகாதாரக் காப்புறுதி
1. இறந்தால் நட்ட ஈடு கிடைக்கும்	நோய்வாய்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே இழப்பீடு கிடைக்கும்
2. நீண்டகாலம்	ஒப்பீட்டளவில் குறுங்காலம்
3. இறப்பின் பின்னர் தங்கி வாழ்பவருக்கும், காலம் முடிந்தால் காப்பறுதி செய்தவருக்கும் கிடைக்கும்	காப்புறுதி செய்தவருக்கு மட்டும் இழப்பீடு கிடைக்கும்
4. இடர் நிச்சமானது	இடர் நிச்சயமற்றது
5. பிணையாகக் கொண்டு கடன் பெறலாம்	அவ்வாறில்லை

வேறுபாடு 2× 1 = 02 புள்ளிகள்

(ஆ) வாடகைக் குடியிருப்பாளர் ஒருவர் அவ்வீட்டினைக் காப்புறுதி செய்ய முடியுமா என்பதனைக் குறிப்பிடுவதுடன், உமது விடைக்கு அடிப்படையான காப்புறுதித் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

காப்புறுதி செய்ய முடியாது 01 புள்ளி

காப்புறுதிசெய்தகு நலன் / உரிமை, வாடகைக்குக் குடியிருப்பவருக்கு சொத்தின் மீது காப்புறுதி செய்தகு நலன் இல்லை. 01 புள்ளி

(ii) (அ) உலக வியாபார அமைப்பின் (WTO) தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வர்த்தக ஒப்பந்தத்தை நிர்வகித்தல்.
2. தேசிய வர்த்தகக் கொள்கைகளை கண்காணித்தலும் மதிப்பிடலும்.
3. சர்வதேச வர்த்தகத்தை இலகுபடுத்தலும் / பிணக்குகளைத் தீர்த்தலும்.
4. சுதந்திர வர்த்தகத்திற்கு ஏற்படும் தடைகளைக் குறைத்தல்.
5. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு தொழிநுட்பம் மற்றும் பயிற்சிகளைக் பெற்றுக் கொடுத்தல்
6. ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல்
7. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வியாபார இயலுமையை அதிகரித்தல்.
8. வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படுதன்மையை மேம்படுத்தல்
9. அங்கத்தவ நாட்டு மக்களின் நலன்களை மேம்படுத்தல்

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கக்கூடிய தந்திரோபாயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
2. புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
3. ஏற்றுமதி செயன்முறைகளை இலகுவாக்கல்.
4. பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
5. ஏற்றுமதிக்கான நிதி வசதிகளை விரிவுபடுத்தல்.
6. இருபக்க, பல்பக்க ஒப்பந்தங்களை விருத்தி செய்தல்.
7. ஏற்றுமதியாளருக்கு நிதிசார் மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
8. சர்வதேச வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் பங்குபற்றல்
9. பல்வேறு வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல்
10. நிறுவன ரீதியாக வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

4× 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) கீழே தரப்பட்டுள்ள அமையவியல் அல்லது ஏற்பாட்டியல் (logistics) முறைகளில் இருந்து **ஒன்றினை** உதாரணத்துடன் விளக்குக.
(1) நேர்மாற்று ஏற்பாட்டியல் (reverse logistics)
(2) மூன்றாம் தரப்பு ஏற்பாட்டியல் (3PL)

நேர்மாற்று ஏற்பாட்டியல் : – உற்பத்திப் பொருட்களை விநியோகித்த பின்னர் மீள்பாச்சலுடன் கூடிய விநியோக முறை

உ.தா: Gas cylinder

அல்லது

மூன்றாம்தரப்பு ஏற்பாட்டியல் : – வியாபார நடவடிக்கைகளை வெளியாருக்குப் பெற்றுக் கொடுத்தல்

உ.தா: பாதுகாப்பு, துப்பரவாக்கல், போக்குவரத்து, பராமரிப்பு சேவைகள், சட்டத் தேவைகளைப் பெறல், கணக்கறிக்கைகளைத் தயாரித்தல்

விளக்கம் 01 புள்ளி

உதாரணம் 01 புள்ளி

(ஆ) களஞ்சியப்படுத்தலில் பொருத்தமான பொதியிடல் மற்றும் உபகரணங்களின் பாவனையினால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தக் கூடியவை
2. ஒழுங்குமுறையாக இடநகர்த்துதல் மூலம் களஞ்சிய சாலையை ஒழுங்குபடுத்த முடிதல்
3. களஞ்சியப்படுத்தும் பொருட்களை இலகுவாக இனம்கண்டு கொள்ள முடிதல்.
4. களஞ்சியசாலையில் இடவசதியினை உத்தமமாகப் பயன்படுத்தலாம்.
5. உற்பத்தித்திறனை அதிகரித்தல்
6. குறைவான கிரயத்துடன் சிறந்த சேவை வழங்க முடிதல்
7. சேதங்கள் வீண்விரயங்கள் குறைதல்
8. ஊழியரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் 4× 1/2 = 02 புள்ளிகள்

(iv) இலங்கையின் போக்குவரத்துத் துறையில் காணப்படும் நெருக்கடி நிலையானது வணிகர் மற்றும் வாடிக்கையாளர்களில் தாக்கம் செலுத்தும் வழிகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

வணிகர்

1. பொருட்களின் விலை அதிகரித்தல்
2. ஊழியர் வரவு பாதிப்படைதல்
3. பொருள் விநியோகத்தில் பிரச்சினை ஏற்படல்
4. மூலப்பொருள் வழங்கலில் காலதாமதம் ஏற்படல்
5. துணைச் சேவைகளை வழங்கத் தாமதமாகுதல் 2× 1 = 02 புள்ளிகள்
6. ஊழியர் உற்பத்தித்திறன் குறைவடைதல்

வாடிக்கையார்

1. நுகர்வுச் செலவு அதிகரித்தல்
2. வாழ்க்கைத் தரம் குறைவடைதல்
3. போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படல்
4. உரிய நேரத்துக்கு சமூகம் தரமுடியாமை
5. தரமான பொருட்களை பயன்படுத்தும் வாய்ப்புக் குறைவடைதல் 2× 1 = 02 புள்ளிகள்

(v) வணிகர் ஒருவர் சமூக ஊடகங்களின் ஊடாகத் தொடர்பாடலை மேற்கொள்வதற்குச் சார்பாகவும் எதிராகவும் காரணங்கள் இரண்டு வீதம் விவரிக்குக.

சார்பாக

1. வாடிக்கையாளர் கவர்ச்சியும் விசுவாசமும் அதிகரித்தல்
2. வாடிக்கையாளர் துலங்கலை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்
3. கிரயம் குறைவடைதல்
4. தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளை விரிவாக்கல்
5. சந்தை ஆய்வை இலகுவாக்கல்
6. வணிக எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள இலகுவாதல்
7. ஊழியர்களைக் கவர்ந்துகொள்வது இலகுவாகும்
8. வாடிக்கையாளர் தொடர்புகளை மேம்படுத்தலாம். 2 × 1 = 02 புள்ளிகள்

எதிராக

1. மேலதிக வளங்களின் தேவைப்பாடு
2. நாளாந்த கண்காணிப்பு அவசியமாகும்
3. சமூக ஊடகங்களில் காணப்படும் பொருத்தமற்ற நடத்தைகளினால் பாதிப்பு
4. எதிர்மறையான பின்னூட்டலைப் பெறல்
5. தகவல்கள் கையாடப்படல்
6. தேவையானவருக்கு தகவல் கிடைக்காமையும் தேவையற்றவர்களுக்கு தகவல் கிடைக்கின்றமையும்
7. வியாபார ரகசியத்தன்மையைப் பாதுகாக்க முடியாமை 2 × 1 = 02 புள்ளிகள்

பகுதி II

5. நஸ்ரின் புடவையகத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான ஹனீபா வணிகத்தின் வளர்ச்சிக்காக ஆக்கத்திறனுடைய செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தும் இடர்களைப் பொறுப்பேற்பவர் ஆவார். அத்துடன், இவர் ஊழியர்களுடன் பயனுறுதியான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன், கிடைக்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் ஊழியர்களின் நிகழ்வுகளிலும் நிறுவனம் சார்பாகக் கலந்து கொள்வார். மேலும் நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளியக தரப்பினருடன் சிறந்த உறவினை கட்டியெழுப்புவார்.

(i) (அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் இனங்காணக்கூடிய முகாமையாளர் ஒருவருக்குரிய பிரதான முகாமைத்துவ வகிபாகங்கள் **இரண்டு** யாவை?

ஆளிடைத் தொடர்பு வகிபாகம்
தகவல் வகிபாகம்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) மேலே (அ) வில் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பிரதான வகிபாகத்திற்கும் அமைவாக சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள உப - வகிபாகங்கள் **இரண்டு** வீதம் தருக.

ஆளிடைத் தொடர்பு வகிபாகம் :- பெயரளவுத் தலைவர்
தொடர்பினைப் பேணுபவர்

தகவல் வகிபாகம் :- கண்காணிப்பாளர்
ஊடகப் பேச்சாளர்

4 × 1/2 = 02 புள்ளிகள்

(ii) (அ) ஹனீபாவிடம் காணப்பட வேண்டிய மிகவும் முக்கியமான முகாமைத்துவத் திறனைப் பெயரிட்டு உமது விடைக்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக.

எண்ணக்கருவாக்கத்திறன் 01 புள்ளி

1. முழு நிறுவனம் தொடர்பாகவும் புரிந்துகொள்ளும் தன்மை காணப்படல்
2. நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்பாக தீர்மானிக்கும் ஆற்றல்
3. பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளலும் தீர்வு காணலும்
4. நிறுவனம் பற்றிச் சிந்திக்கும் நுண்ணறிவாற்றல்
5. செயற்பாட்டு ரீதியாக விளக்கக் கூடிய ஆற்றல்

2× 1/2 = 01 புள்ளி

(ஆ) ஹனீபா தமது நிறுவனத்துக்காக இலட்சியநோக்குக் கூற்றை விருத்தி செய்ய எண்ணுவாராயின் அதனுள் உள்ளடக்கப்பட வேண்டிய கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. இலக்கு வாடிக்கையாளர்
2. உற்பத்தியின் தன்மை
3. இலக்கு சந்தை
4. தொழில்நுட்பம்
5. பெறுமானங்கள், நம்பிக்கை, தத்துவங்கள்
6. வணிகத்தின் விசேட தன்மை
7. மக்களின் பிரதிவிம்பம்
8. ஊழியர்கள்
9. நிலைத்திருத்தல், விருத்தி, இலாபத்தன்மை

4× 1/2 = 02 புள்ளிகள்

(iii) "ஹனீபா ஊழியர் நோக்கிய தலைவராக ஊழியர்கள் மத்தியில் பிரபல்யமானவர்."

(அ) 'ஊழியர் நோக்கிய தலைமைத்துவப் பாங்கு' என்பதை வரைவிலக்கணப்படுத்துவதுடன் அதன் குணாம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

ஊழியர்களை கட்டுப்படுத்துவதை விடவும் அவர்களை ஊக்கப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தும் தலைமைத்துவப்பாங்கு

01 புள்ளி

குணாம்சங்கள்

1. ஊழியர்களுடன் நட்புடன் செயற்படுதல்
2. ஊழியர்களுடன் நம்பிக்கையுடன் செயற்படுதல்
3. ஊழியர்களுடன் கௌரவமான தொடர்பினைப் பேணுதல்
4. தீர்மானம் எடுக்கும்போது ஊழியர்களின் பங்களிப்பினைப் பெறுதல்
5. ஊழியர்களின் திறன்களை இனங்கண்டு அதன் மூலம் நன்மையைப் பெற்றுக் கொள்ளல்.
6. ஊழியர்களிடையே நேரான தொடர்புகளை ஏற்படுத்துதல்
7. ஊழியர்களுக்கு வழிகாட்டல்
8. ஊழியர்களுடனான எண்ணங்கள் பிரச்சினைகளை திறந்த மனதுடன் கலந்துரையாடல்

2× 1/2 = 01 புள்ளி

(ஆ) ஹனீபா தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினைப் பன்முகப்படுத்துவதற்கு எண்ணுவாராயின், அதனூடாக வணிகமானது பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைத்** தருக.

1. உயர்மட்ட முகாமையின் வேலைப்பழு குறைவடையும்
2. தரமான தீர்மானங்களை மேற்கொள்ளலாம்
3. தீர்மானங்களை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும்
4. கீழ்மட்ட ஊழியர் முன்னேற்றமடைதல்
5. ஊழியர் ஊக்குவிப்பு உயர்வடைவதுடன் திருப்தி மேம்படுத்தப்படும்
6. வினைத்திறனான தொடர்பாடலை மேற்கொள்ளலாம்
7. சிறப்பான மேற்பார்வையும் கட்டுப்பாடும் காணப்படும்
8. மானிடத்தேவைகளை திருப்தி செய்ய முடிதல்

4× 1/2 = 02 புள்ளிகள்

(iv) கீழே தரப்படுவது 'நஸ்ரீன் புடவையகத்தின்' உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பான தரவுகள் சிலவாகும்.

- மூலப்பொருட்கள் - 5 000 அலகுகள்
- ஊழியம் - 2 500 மணித்தியாலங்கள்
- இயந்திரம் - 4 000 மணித்தியாலங்கள்
- சக்திக்கான கிரயம் - ரூ 150 000
- ஊழியக் கிரயம் - மணித்தியாலத்திற்கு ரூ 100
- இயந்திரக் கிரயம் - மணித்தியாலத்திற்கு ரூ 25
- மூலப்பொருள் கிரயம் - அலகிற்கு ரூ 10
- மொத்த வெளியீடு - 300 000 அலகுகள்

(அ) பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
(1) ஊழிய உற்பத்தித்திறன்
(2) இயந்திர உற்பத்தித்திறன்
(3) மொத்த உற்பத்தித்திறன்

ஊழிய உற்பத்தித்திறன் $= \frac{\text{வெளியீடு}}{\text{ஊழிய மணித்தியாலம்}}$

$= \frac{300,000}{2,500}$

= 120 அலகுகள் 1/2 புள்ளி

இயந்திர உற்பத்தித்திறன் $= \frac{\text{வெளியீடு}}{\text{இயந்திர மணித்தியாலம்}}$

$= \frac{300,000}{4,000}$

= 75 அலகுகள் 1/2 புள்ளி

மொத்த உற்பத்தித்திறன் $= \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$

$= \frac{300,000}{550,000}$

= 0.545 அலகுகள் 01 புள்ளி

(ஆ) இயந்திர உற்பத்தித்திறனை விருத்தி செய்து கொள்வதற்காக நிறுவனமானது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. முன்னேற்றகரமான தொழிநுட்ப உபகரணங்களுடன் கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
2. பழுதடையாத இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
3. ஒழுங்கான முறையில் இயந்திரங்களைப் பராமரித்தல்
4. தடைகளை இனங்காணல்
5. இயந்திரங்களை மேம்படுத்தல்
6. கொள்ளளவை விருத்தி செய்தல்
7. இயந்திரங்களை தன்னியக்க மயமாக்கல்

2 × 1 = 02 புள்ளிகள்

(v) ஹனீபாவின் வணிகத்தினை பயனுறுதி வாய்ந்த விதத்தில் செயற்படுத்துவதற்கு கட்டுப்பாட்டுச் செயன்முறையில் உள்ளடக்கவேண்டிய படிமுறைகளைப் பெயரிட்டு அவற்றினைச் சுருக்கமாக விவரிக்குக.

1. நியமங்களை உருவாக்குதல்
2. செயற்பாட்டு விளைவுகளை அளவிடுதல்
3. விலகல்களை இனங்காணல்
4. திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

குறிப்பிட 4 × 1/2 = 02 புள்ளிகள்

விளக்க 4 × 1/2 = 02 புள்ளிகள்

6. 'ரம்யா' நிறுவனமானது தரத்தில் உயர்வான விசுக்கோத்துக்களை தயாரிப்பதுடன் தொடர்புடையதாகும். இந் நிறுவனத்துக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளரானவர் சந்தைத் துண்டமாக்கல் மற்றும் விற்பனை மேம்படுத்தலின் அவசியத்தினை மேல்மட்ட முகாமையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். மேலும், இத்தயாரிப்பு தொடர்பில் பொருத்தமான பொதியிடலின் அவசியத் தன்மையும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

(i) (அ) பயனுறுதியான சந்தைத் துண்டமாக்கல் கொண்டிருக்க வேண்டிய தேவைப்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

1. அளவிடக் கூடியதாக இருத்தல்
2. அடைந்துகொள்ளக் கூடியதாக இருத்தல்
3. தேவையான அளவினைக் கொண்டிருத்தல்
4. வேறுபடுத்தி இனங்காணக்கூடியதாக இருத்தல்
5. செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்

4 × 1/ 2 = 02 புள்ளிகள்

(ஆ) சந்தைத் துண்டமாக்கலினூடாக வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக.

1. முழுமையான சந்தையினையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதனால் சந்தை தொடர்பான சிறந்த விளக்கம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடிதல்
2. பொருத்தமான மற்றும் காலத்திற்கு ஏற்றதுமான சந்தர்ப்பங்களை இனங்காண முடிதல்
3. நிறுவனத்திடம் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியுடனும் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.
4. நிறுவனத்திற்கு சந்தை தொடர்பாக காணப்படும் இடர்களை இழிவுபடுத்திக் கொள்ளக் கூடியதாக இருத்தல்

5. சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை மிகச் சிறப்பாக மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்
6. புதிய உற்பத்திப் பொருட்களை மேம்படுத்த முடிதல்
7. பயனுறுதியான சந்தைப்படுத்தலை வடிவமைக்க முடிதல்
8. மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க முடிதல்
9. வாடிக்கையாளரை மையப்படுத்திய கலாசாரத்தினை விருத்தி செய்ய முடிதல்

4 × 1/2 = 02புள்ளிகள்

(ii) (அ) விசுக்கோத்துக்கான பொதியிடலின் உருவாக்கத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பொருளின் தன்மை
2. பொதியிடலின் மூலம் உற்பத்திப் பொருளுக்கு கிடைக்கும் அனுகூலம்
3. தொழில்நுட்பத்தின் பொருத்தப்பாடு
4. பொதியிடலின் சிறந்த வடிவமைப்பு
5. வணிகருக்குள்ள வசதிகள்
6. நுகர்வோருக்குக் கிடைக்கும் பயன்களும் வசதிகளும்
7. சூழல் நேயத் தன்மை
8. பொதியிடலுக்கு ஏற்படும் கிரயம்

4 × 1/2 = 02புள்ளிகள்

(ஆ) விசுக்கோத்து தொடர்பில் எதிர் - சந்தைப்படுத்தல் (de-marketing) காணப்படுமாயின், அதனை வெற்றிகொள்வதற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவரால் மேற்கொள்ளக்கூடிய தந்திரோபாயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. மேம்படுத்தல்
2. வணிகத்தின் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்
3. விழிப்புணர்வுச் செயற்பாடு
4. விளம்பரப்படுத்தல்
5. உற்பத்திப் பொருளுக்கான மீள் உருவாக்கம்
6. பண்டக்குறியினை புதிதாக்குதல்

4 × 1/2 = 02புள்ளிகள்

(iii) உற்பத்திப்பொருள் வகைப்படுத்தலுக்கு அமைவாக, விசுக்கோத்து எந்தப் பொருள் வகையினுள் அடங்குகின்றது எனக் குறிப்பிட்டு, அதற்கு மிகப் பொருத்தமான விநியோகத் தந்திரோபாயத்தினையும் மற்றும் மேம்படுத்தல் தந்திரோபாயத்தினையும் காரணங்களுடன் குறிப்பிடுக.

நுகர்வுப் பொருள் 02 புள்ளிகள்

<u>விநியோகத் தந்திரோபாயம்:</u>

பரந்த விநியோக வலைப்பின்னல் முறை

எந்த ஒரு விற்பனை நிலையத்திலும் பெற்றுக்கொள்ள முடிதல் 01 புள்ளி

<u>மேம்படுத்தல் தந்திரோபாயம்:</u>

விளம்பரப்படுத்தல் பேரளவு வாடிக்கையாளரை அடையக்கூடிய முறையில் விளம்பரப்படுத்தல்

01 புள்ளி

(iv) (அ) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. அரச உத்தரவாதம் காணப்படல்
2. இடர் மிகவும் குறைந்த பாதுகாப்பான முதலீட்டு முறை
3. முதிர்வுகாலத்திற்கு முன்னர் இரண்டாம் தர சந்தையில் விற்பனை செய்ய முடியும்
4. எந்த நேரத்திலும் உரிமையினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்
5. அதிக திரவத்தன்மை கொண்டது
6. வட்டி வருமானம் முன்னரே பெற்றுக்கொள்ள முடியும்
7. பிடித்துவைத்தல் வரி இல்லை

2 × 1 = 02புள்ளிகள்

(ஆ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினைத்** தருக.

உரிமம் பெற்ற வணிக வங்கி	உரிமம் பெற்ற விசேட வங்கி
1. நடைமுறைக் கணக்கினைப் பேணும்	1. நடைமுறைக் கணக்கினைப் பேணாது
2. அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்கும்	2. அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்காது
3. பொதுமக்களின் வைப்புகளை ஏற்பதே நோக்கமாகும்	3. கைத் தொழில் மற்றும் விவசாயத் துறைகளுக்கான நிதி வசதிகளை ஏற்படுத்துவதே நோக்கமாகும்
4. மத்தியவங்கியின் நாணயச் சபையில் பதியப்பட்டது.	4. வங்கிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுடன் மத்திய வங்கியின் விசேட உரிமத்தைப் பெற்றிருத்தல்.
5. பணவாக்கத்தில் ஈடுபடும்	5. பணவாக்கத்தில் ஈடுபடாது
6. குறுங்காலக் குவிமையப்படுத்தல்	6. நீண்ட கால குவிமையப்படுத்தல்

இரு வேறுபாடுகளுக்கு 2× 1 = 02புள்ளிகள்

(v) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கொழும்பு பங்குச் சந்தை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் **நான்கினை** எழுதுக.

1. தனிநபர்களினதும் நிறுவனங்களினதும் முதலீட்டினை ஊக்குவித்தல்
2. கொழும்புப் பங்குச் சந்தையில் முதலிடுவதன் மூலம் முதலீட்டாளர்கள் பல்வேறுபட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்
3. கம்பனிகளால் பாரியளவிலான மூலதனத்தினைத் திரட்டிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுதல்
4. நாட்டினுள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்த்துக் கொள்ள முடிதல்
5. அரச பிணைகளை விற்பனை செய்வதன் மூலம் அரசுக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள முடிதல்
6. கம்பனிப் பங்குகளுக்கு பெறுமானத்தை ஏற்படுத்த முடிதல்
7. கம்பனியின் நன்மதிப்பும் பிரதிவிம்பமும் உயர்வடைதல்

4 × 1 = 04புள்ளிகள்

7. (i) (அ) 'மூலதனப் பாதீடலை' சுருக்கமாக விவரிக்குக.

எதிர்காலத்தில் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வணிக நிறுவனம் ஒன்றிற்கு உரிமையாக இருக்கின்ற நிகழ்கால நிதியினைப் பயனுறுதிகொண்டதாக நீண்டகாலச் சொத்துக்களில் அல்லது நீண்டகால செயற்திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் திட்டமிடல் மூலதனப் பாதீடாகும்

02 புள்ளிகள்

(ஆ) "வணிகமொன்றுக்கான நிதி மூலங்களில வெளிவாரி நிதி மூலங்களைக் காட்டிலும் உள்வாரி நிதி மூலங்கள் அனுகூலமானவையாகும்." இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

ஆம் - உள்வாரி மூலம் நிதிதிரட்டல் இலகுவானது 01 புள்ளி

1. செலவு குறைவு
2. இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்
3. மீளச் செலுத்த வேண்டிய தேவை இல்லை
4. வணிகப் பொறுப்புக்கள் அதிகரிக்காமை
5. விசேட நிபந்தனைகளுக்கு உட்படவேண்டிய அவசியம் இல்லை
6. உரிமையும் கட்டுப்பாடும் நிறுவனத்திடம் காணப்படல்
7. மேலதிக வரியினைத் தவிர்ககலாம்

2 x 1/2 = 01புள்ளி

(ii) (அ) கொடுப்பனவு முகாமைத்துவம் வணிகமொன்றுக்கு முக்கியமாவதற்கான காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

1. ஊழியர் திருப்தியை அதிகரிக்க முடிதல்
2. திறமையான ஊழியர்களைக் கவர்ந்து கொள்ளவதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் முடிதல்
3. ஊழியர் செயற்றிறனை முன்னேற்றமடையச் செய்ய முடிதல்
4. ஊழியர் புரள்வைக் குறைக்க முடிதல்
5. நிறுவன நற்பெயரை அதிகரிக்கச் செய்தல்
6. ஊழியர் வரவின்மையைக் குறைக்க முடிதல்
7. ஊழியர் விசுவாசத்தை அதிகரிக்க முடிதல்

2 x 1= 02 புள்ளிகள்

(ஆ) ஊழியர் ஒருவர் தவறான நடத்தையில் ஈடுபடுவாராயின் தொழில் வழங்குனரால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. வாய்மொழி மூலமாக எச்சரித்தல்
2. எழுத்து மூலமாக எச்சரித்தல்
3. ஏற்பட்ட நட்டத்தை அறவிடுதல் / தண்டம் விதித்தல்
4. வேலையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தல்
5. ஒழுக்காற்று நடவடிக்கையாக வேலையில் இருந்து இடம்மாற்றுதல்
6. சம்பள உயர்ச்சிகளை நிறுத்துதல் / தாமதப்படுத்தல்
7. பதவி குறைப்பு / பணியிறக்கம் செய்தல்
8. வேலையில் இருந்து நீக்குதல்

4 x 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) மனித வளத்தில் காணப்படும் விசேட குணாம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. உயிருள்ள வளமொன்றாகயிருத்தல்
2. சிந்திப்பதற்கும் மாற்றுச் செயற்பாடுகளைக் காட்டுவதற்கும் முடியுமாக இருத்தல்
3. ஏனைய வளங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்
4. பயிற்சி அளிப்பதன் மூலம் பெறுமானத்தை அதிகரிக்க முடிதல்
5. ஒரே அணியாகக் கருமமாற்றல்
6. நடத்தைசார் சிக்கல் தன்மை கொண்டதாக இருத்தல்
7. ஆக்கபூர்வமாகவும் புத்தாக்கத்துடன் கூடியதாகவும் காணப்படல்
8. உணர்ச்சிவசயப்படக் கூடியதாக இருத்தல்
9. நிதிசார், நிதிசாரா ஊக்குவிப்புக்களால் தூண்டப்படக் கூடியதாக இருத்தல் 2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) ஊழியர் தகுதிகாண் காலம் என்பதனை வரையறை செய்து, அதனால் தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர் ஆகிய இரு சாரருக்கும் கிடைக்கக்கூடிய அனுகூலம் ஒன்று வீதம் குறிப்பிடுக.

பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியரை அப்பதவியில் நிரந்தரமாக்க முன்னர் அவர் சேவை செய்யவேண்டிய காலப்பகுதி தகுதிகாண் காலமாகும். 01 புள்ளி

அனுகூலம் :

<u>தொழில் வழங்குனர் :</u>

1. குறித்த ஊழியர் பொருத்தமானவரா இல்லையா எனத் தீர்மானிக்கலாம்
2. புதிதாக இணைந்துகொண்ட ஊழியரைக் கணிப்பீடு செய்யலாம்

1 × 1/2 = 1/2 புள்ளி

ஊழியர் :

1. தான் தொடர்ந்து வேலையில் இருப்பதற்கான விருப்பத்தைத் தீர்மானிக்கலாம்
2. வேலைச் சூழல் தொடர்பாகக் கற்றுக் கொள்ளவதற்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்தலாம்
3. சக ஊழியர்களுடனும், மேற்பார்வையாளர்களுடனும் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளப் பயன்படுத்தலாம்

1 × 1/2 = 1/2 புள்ளி

(iv) (அ) ஒவ்வொரு வேலையும் மூன்று பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது.
(1) அப்பிரதான கூறுகள் **மூன்றினையும்** பெயரிடுக.
(2) நீங்கள் இனங்கண்ட பிரதான கூறுகளுக்கிடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விவரிக்குக.

(1) பணி, கடமை, பொறுப்பு

மூன்றுக்கு 01 புள்ளி
இரண்டிற்கு 1/2 புள்ளி
ஒன்றுக்கு புள்ளி இல்லை

(2) பணி - நடத்தைகளை உள்ளடக்கிய உறுதியாக இனங்காணக் கூடிய வேலைச் செயற்பாடு

கடமை - அநேக பணிகளை உள்ளடக்கிய தனிநபர் ஒருவர் நிறைவேற்றுகின்ற மிகப் பாரிய வேலைப் பகுதி

பொறுப்பு - பணி, கடமையினை உரிய எதிர்பார்க்கப்பட்ட நியமங்களுக்கேற்ப வேற்றவேண்டிய கடப்பாடு

தொடர்பு -பணி ஒன்றை நிறைவேற்றும் போது கடமை உருவாகும் அதேவேளை கடமையானது நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கும் (பொறுப்பு)

O1 புள்ளி

(ஆ) மனித வளத் தேவையை எதிர்வுகூறுவதில் கருத்திற்கொள்ள வேண்டிய உள்ளகக் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. குறித்த பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி
2. நிறுவனத்தின் குறிக்கோள்
3. உற்பத்தி முறை
4. ஊழியர்களின் எதிர்கால இளைப்பாறுகை
5. ஊழியர் இராஜினாமா செய்தல்
6. பதவி உயர்வு
7. ஊழியர் வேலை நீக்கம்
8. ஊழியர் பணி முடிவுறுத்தல்
9. நிகழ்கால மற்றும் எதிர்கால நிதி நிலைமை

4 × 1/2 = 02 புள்ளிகள்

(v) (அ) நியாயமான காரணம் எதுவுமின்றி ஊழியர் ஒருவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டாரென ஊழியர் நியாய சபையினால் தீர்மானிக்கப்படின் அந்த ஊழியர் பெற்றுக்கொள்ளக்கூடிய நிவாரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. சேவையில் மீண்டும் இணைந்து கொள்ள முடிதல்
2. நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ள முடிதல்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) நிறுவனமொன்றினால் நியமங்களுக்கு அமைவாக தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு (OHS) முறைகள் பின்பற்றப்படாதவிடத்து நிறுவனத்துக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. ஊழியர்களுக்கான சுகாதாரக் காப்புறுதித் திட்டங்களுக்கான தவணைக் கட்டணம் அதிகரித்தல்
2. நட்டஈட்டுக் கொடுப்பனவு அதிகரித்தல்
3. ஊழியர் திருப்தியின்மை, குழப்பநிலைமை அதிகரித்தல்
4. ஊழியர் தரம் குறைவடைதல்
5. உபகரணங்களுக்கு ஏற்படும் சேதம் அதிகரித்தல்
6. தேவையற்ற மருத்துவச் செலவுகள் அதிகரித்தல்
7. நிறுவனத்தின் நன்மதிப்புப் பாதிப்படைதல்
8. ஊழிய உற்பத்தித்திறன் குறைவடைதல் , ஊழியச் செலவு அதிகரித்தல்
9. ஊழியர் புரள்வு, வரவின்மை அதிகரித்தல்
10. சட்டத் தேவைப்பாடுகளுக்கான கட்டணங்கள் அதிகரித்தல்

2 × 1 = 02 புள்ளிகள்

8. (i) (அ) "தகவல்களை வெவ்வேறான நியதிகளுக்கு அமைவாக வகைப்படுத்த முடியும்." தன்மைக்கு அமைவாக தகவல்களின் வகைகளைக் குறிப்பிடுக.

அளவு ரீதியான தகவல்

பண்பு ரீதியான தகவல்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) தகவல் முறைமையொன்றின் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. குறித்த பிரிவினருக்கு சரியான தகவல்களை தொடர்பாடல் செய்தல்
2. உற்பத்திப் பொருளின் தரத்தை உயர்த்த உதவுதல்
3. நிறுவனத்தின் கிரயத்தைக் குறைக்க உதவுதல்
4. போட்டி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான சூழலை உருவாக்குதல்
5. முகாமைத்துவக் கருமங்களின் வெற்றிகரமான தன்மையினை உறுதிப்படுத்துதல்
6. தேவைப்படும் எச்சந்தர்ப்பங்களின் போது தேவையான பிரிவினர்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

4 × 1/2 = 02 புள்ளிகள்

(ii) (அ) முறைமை மென்பொருளுக்கும் இயக்க மென்பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக.

முறைமை மென்பொருள்	இயக்க மென்பொருள்
கணினித் தொகுதியினை செயற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது தொடர்பாடல் முறைமையில் வழங்களைக் கட்டுப்படுத்துவதும் அதனுடன் இடைத் தொடர்பை ஏற்படுத்துவதாகும்.	கணினியில் காணப்படும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் முகாமைசெய்ய உதவுவது.
01 புள்ளி	01 புள்ளி

(ஆ) அழகன் கம்பனியானது தனது ஊழியர் தரநிலைக்குப் பொருத்தமான தகவல் முறைமைகளைக் கருத்திற்கொள்ள உத்தேசிக்கின்றது. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியர் தரநிலைக்கும் பொருத்தமான தகவல் முறைமையினைப் பெயரிடுக.
(1) மேல்மட்ட முகாமை
(2) நடுத்தர மட்ட முகாமை
(3) தொழினுட்ப உத்தியோகத்தர்கள்
(4) எழுதுவினைஞர்கள்

- மேல்மட்ட முகாமை – நிறைவேற்று உதவி முறைமை (ESS)
- நடுத்தர மட்ட முகாமை – முகாமைத் தகவல் முறைமை (MIS)
  தீர்மான உதவி முறைமை (DSS)
- தொழிநுட்ப உத்தியோகத்தர் – அறிவுப் பணி முறைமை (KWS)
- எழுதுவினைஞர் – கொடுக்கல் வாங்கல் செயற்படுத்தல் முறைமை (TPS)

4 × 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்துவதனால் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைத்** தருக.

1. இலத்திரனியல் வர்த்தகத்திற்குப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்
2. பொருட்கள் சேவைகளை விளம்பரப்படுத்தக் கூடியதாக இருத்தல்
3. தமது போட்டியாளர்கள் தொடர்பான முக்கியமான தகவல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடிதல்
4. தொடர்பாடல் கிரயத்தை இழிவு மட்டத்தில் பேணலாம்
5. தனக்குரிய சந்தையை சர்வதேச ரீதியாக விரிவுபடுத்த முடிதல்
6. தகவல்களை விரைவாகவும் சரியாகவும் பெற்றுக் கொள்ள முடிதல்
7. சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிதல்
8. பயிற்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுதல்
9. ஊழியர்களை வேலையில் இணைத்துக் கொள்ளல்

4 x 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) "மின்னஞ்சல் (email) முகவரி ஒன்று உப - பாகங்கள் பலவற்றை கொண்டுள்ளது." கீழே தரப்பட்ட மின்னஞ்சல் முகவரியின் *A* மற்றும் *B* ஆகிய இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக.



A. User name - பயனர் பெயர்

B- Country code - நாட்டுக்குரிய குறியீடு

2 x 1 = 02 புள்ளிகள்

(iv) (அ) வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வணிகத்தின் தூரநோக்கு, இலட்சியநோக்கு, இலக்கு, நோக்கம் என்பவற்றை வெளிக்கொணர்தல்
2. வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு வணிகம் தொடர்பான தெளிவொன்றினைப் பெற்றுக் கொடுத்தல்
3. தேவையான நிதிவசதியினைப் பெறலாம்
4. தேவையான வளங்களை இனங்காணவும் சரியான வகையில் ஒழுங்கமைக்கவும்
5. எதிர்கால வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமான முறையில் முன்னெடுத்துச் செல்லல்
6. வணிக செயற்திறனை மதிப்பீடு செய்தல்
7. வணிகத்திற்கான ஊழியர்களை ஈர்த்துக் கொள்ளல்
8. வணிக செயற்பாடுகளை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும்

4 x 1/2 = 02 புள்ளிகள்

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

(ஆ) வணிகத் திட்டம் ஒன்றில் உள்ளடங்கியுள்ள நிறைவேற்றுச் சுருக்கம் ஒன்றினைத் தயாரிப்பதன் பிரதான நோக்கத்தினைச் சுருக்கமாக விவரிக்குக.

வணிகத் திட்டத்தினை வாசிப்பவர்க்கு அத்திட்டம் தொடர்பான பருமட்டான தெளிவொன்றைப் பெற்றுக் கொடுகத்தல்

02 புள்ளிகள்

(v) (அ) வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள நிதித் திட்டம் வணிகர் ஒருவருக்கு முக்கியத்துவமாகும் சந்தர்ப்பங்கள் **நான்கினைத்** தருக.

1. **வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான முதலீட்டின் அளவினைத் தீர்மானிப்பதற்கும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும்**
2. **வணிக நிதியை முதலீடு செய்தல் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு**
3. **நிதிப்பற்றாக்குறை ஏற்படக்கூடிய காலத்தை முன்கூட்டியே அறிந்து அதற்கான தீர்வுகளில் ஈடுபடுவதற்கு**
4. **நிதி மேலதிகம் ஏற்படும் காலத்தை முன்கூட்டியே இனங்கண்டு முதலீட்டுத் தீர்மானங்களில் ஈடுபடுவதற்கு**

4 × 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) வணிகத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்போது சூழல் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான அவசியத்தினை சுருக்கமாக விளக்குக.

வணிகச் சூழல் நேசிப்புத் தன்மை கொண்டது என்பதனை வெளிப்படுத்த அவசியமாகும். இதன் மூலம் சூழலுக்கு இசைவான பொருட்களைப் பயன்படுத்தல், கழிவகற்றல் முறை என்பவற்றினைத் தேடியறிந்து பகுப்பாய்வு செய்தல் இடம்பெறும். .இதன்மூலம் வணிகத்தின் நிலைப்புத் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

02 புள்ளிகள்

PAST PAPERS WIKI

(41) WWW.PastPapers.WiKi (41)

2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO

2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO

2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO

2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO

2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO

2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO

2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO

2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO

2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO

2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO

2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO

2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO

2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO

2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO

2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO

2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO

2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO

2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO

LOL STORE PVT LTD Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments
KOKO
CASH ON DELIVERY
VISA